DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.1/2024**

**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | முருகவேல் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அய்யாகன்னு | சமயம் | - | |
| கிராமம் | - | மாணிக்கா எஸ்டேட் | வயது | - | 49/2025 |
| சாதி | - | | | | |

**<u>21-08-2025</u>**

**( 1, 2 எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வெற்றிவேல் என்பவரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும் எ ன்னிடம் காட்டப்படம் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

கடந்த 07-01-2024-ம் தேதி காலை 10.15 மணிக்கு வால்பாறை காவல் நிலைய போலீசார் குற்ற எண் 4/2024 வழக்கு தொடர்பாக மாணிக்கா என்சி என்ற இடத்தில் வெற்றிவேல் வீட்டின் முன்பாக விசாரணைக்காக வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அப்போது நானும் பிரஸ் பாலன் என்பவரும் அந்த இடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் எங்கள் முன்பாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும் பிரஸ்பாலன் என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசுதரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.